# பாரதிதாசன் பல்கலைக்கழகம்

(தேசிய மதிப்பீட்டு தரநிர்ணயக்குழுவின் மதிப்பீட்டில் ‘A+’ தரச்சான்றிதழ் மூன்றாம் சுற்றில் பெற்றது)

**பல்கலைப் பேரூர், திருச்சிராப்பள்ளி–620024**

**முனைவர் சு.சீனிவாசராகவன்,** எம்.ஏ., எம்.எல்.ஐ.எஸ்ஸி., பிஎச்.டி.,
**தேர்வு நெறியாளர் (பொ)**

**தொலைபேசி : 0431- 2407016/ 2407060**
**தொலை நகலி: 0431 - 2407444**
**மின்னஞ்சல் : coe@bdu.ac.in**
**வலைதளம் : www.bdu.ac.in**

---

**ந.க. எண்: தே.பி./இளநிலை/செய்முறைத்தேர்வுகள் /நவம்பர் 2021/ நாள்: 27.09.2021**

பெறுபவர்

முதல்வர்
பல்கலைக்கழக இணைவு பெற்ற அனைத்துக் கல்லூரிகள் (தன்னாட்சி பெறாத கல்லூரிகள்)

அய்யா/அம்மையீர்,

**பொருள்**: இளநிலைத் தேர்வுப் பிரிவு – நவம்பர் 2021–ல் நடைபெறவிருக்கும் பல்கலைக்கழக இளநிலை பட்டப்படிப்பு பாடங்களுக்கான செய்முறை தேர்வுகளுக்கான தேர்வுக் கால அட்டவணை தெரிவித்தல் - தொடர்பாக.

**பார்வை:** துணைவேந்தர் அவர்களின் ஆணை நாள்: 22.09.2021

---------

நடைபெறவிருக்கும் நவம்பர் 2021 பல்கலைக்கழக இளநிலை பட்டப்படிப்புகளுக்கான செய்முறைத் தேர்வுகளின் தேர்வுக் கால அட்டவணை கீழ்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது.

| வ.எண் | பாடப்பிரிவுகள் | செய்முறைத் தேர்வுகள் துவங்கும் நாள் | செய்முறைத் தேர்வுகள் முடிவுறும் நாள் | செய்முறைத்தேர்வு மதிப்பெண் பட்டியல் (Hard Copy Duly signed by both Examiners and Forwarded by Principal through HOD வந்து சேரவேண்டிய நாள் | அனைத்து எழுத்துத் தேர்வகளுக்கான அகமதிப்பெண்கள் வந்து சேர வேண்டிய நாள் |
|---|---|---|---|---|---|
| 1 | B.A/B.B.A/B.Com | 20.10.2021 | 22.10.2021 | 12.11.2021 | 30.11.2021 |
| 2 | B.Sc., | 20.10.2021 | 10.11.2021 | 12.11.2021 | 30.11.2021 |

செய்முறைத் தேர்வுகள் (Practical exams for B.A., B.B.A.,B.Sc., & B.Com Courses) நடத்திடும் பொருட்டு அதற்கான செய்முறைத்தேர்வு கால அட்டவணையை மூன்று நகல்கள் தயார் செய்து **08.10.2021-ஆம் தேதிக்குள் இவ்வலுவலகதிற்கு உடன் அனுப்பி ஒப்புதல் பெற்ற பிறகே செய்முறைத் தேர்வுகளை நடத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. காலதாமதமாகக் கிடைக்கப்பெறும் தேர்வுக்கால அட்டவணைகள் பரிசீலனைக்கப்படாது எனத் தெரிவிக்கலாகிறது.**

பல்கலைக்கழக ODD Semester / EVEN Semester செய்முறைத்தேர்வில் தேர்ச்சி பெறாத மாணவ / மாணவிகள், அந்தந்த ODD / EVEN பருவத்தேர்வில்தான் தேர்வு (Practical Examinations) எழுத இயலும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இதனைத் தங்கள் கல்லூரியில் பயிலும் மாணவ/ மாணவிகளுக்கும், தொடர்புடைய பேராசிரியர்களுக்கும் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

…2

தங்கள் கல்லூரியில் பயிலும் அனைத்து மாணவர்களின் எழுத்துத் தேர்வுகளுக்கான அகமதிப்பீட்டு மதிப்பெண் பட்டியல்கள் உரிய தேதிக்குள் exams1.bdu.ac.in / New Portal-ல் பதிவேற்றம் செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், 2021 – 2022 –ல் சேர்க்கை பெற்ற முதலாமாண்டு மாணவர்களுக்கான பருவத்தேர்வு விவரங்களை, தனியாக பல்கலைக்கழக "New Portal" –ல் பதிவேற்றம் செய்யப்படவேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

நவம்பர் 2021, செய்முறை தேர்விற்கு நியமனம் செய்யப்படும் புறத்தேர்வாளர்கள் தேர்வுப் பணிக்குச் செல்ல இயலாத நிலை ஏற்படின், அந்தந்த கல்லூரி முதல்வர்கள் மற்றும் துறைத்தலைவர்கள் அருகாமையில் உள்ள பல்கலைக்கழக இணைவு பெற்ற கல்லூரிகளில் பணியாற்றும் பல்கலைக்கழக பணிமூப்பு பட்டியலில் உள்ள ஆசிரியர்கள்/தகுதி பெற்ற துறை ஆசிரியர்களை புறத்தேர்வாளர்களாக நியமனம் செய்து கொள்ளவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இக்கடிதத்தின் மீது தனிக்கவனம் செலத்தி உரிய காலத்திற்குள் மதிப்பெண்களை அனுப்பி மாணவ/ மாணவிகளின் தேர்வு முடிவுகள் விரைவாக வெளியிட ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இக்கடிதம் பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புகை அளிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒ/ம் xxxxxxx

நாள் : 27-09-2021

தேர்வு நெறியாளர் (பொ)